www.Padasalai.Net

சுருக்கம்

பள்ளிக் கல்வி - 2024-2025-ஆம் கல்வியாண்டிற்கான தொடக்கக் கல்வி பட்டயப் படிப்பு - மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் (DIET), அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் (GTTI), ஒன்றிய ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் (BITE) மற்றும் அரசு உதவிபெறும் / சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கையினை அரசின் நெறிமுறைகளைப் பின்பற்றி இணைய தளம் (Online) வாயிலாக நடத்திட அனுமதி - ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>பள்ளிக் கல்வித் (க2ஆப) துறை</u>

அரசாணை (நிலை) எண். 107

நாள். 20.05.2024
திருவள்ளுவராண்டு 2055
குரோதி வருடம், வைகாசி 07

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.92, பள்ளிக் கல்வித் துறை, நாள் 09.05.2018.
2. அரசாணை (நிலை) எண்.87, பள்ளிக் கல்வித் துறை, நாள் 28.05.2019.
3. அரசாணை (நிலை) எண். 92, பள்ளிக் கல்வித் (க2ஆப) துறை, நாள் 22.05.2023.

<u>மேலும் படிக்க:</u>

4. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் கடித ந.க.எண்.293/சி3/2024, நாள் 06.05.2024.

....

<u>ஆணை:</u>

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 12 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் மொத்தமாக 1050 இடங்களுக்கு மாணவர் சேர்க்கை செய்ய அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2019-2020-ஆம் கல்வியாண்டிற்கான தொடக்கக் கல்வி பட்டயப் படிப்பு மாணவர் சேர்க்கை சார்ந்து அவ்வரசாணையில் வகுக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி மாணவர் சேர்க்கை மேற்கொள்ள மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநருக்கு அனுமதியளித்து ஆணை வெளியிடப்பட்டது.

www.Padasalai.Net

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2023-2024-ஆம் கல்வியாண்டில், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் (DIET), அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் (GTTI), ஒன்றிய ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் (BITE) 1830 மாணவர் சேர்க்கை இடங்களுக்கும் மற்றும் 10 உதவி பெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில், 900 மாணவர் சேர்க்கை இடங்கள் மற்றும் 23 சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் 1400 மாணவர் சேர்க்கை இடங்கள் ஆக மொத்தம் 33 நிறுவனங்களில் உள்ள 2300 மாணவர் சேர்க்கை இடங்களுக்கும் உரிய நெறிமுறைகளின்படியும், தொடக்கக் கல்வி பட்டயப் படிப்பு செயல்பாடுகளுக்கான கால அட்டவணைப் பின்பற்றியும், மாணவர் சேர்க்கைக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் கீழ் 12 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் (DIET), 8 அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (GTTI) மற்றும் 6 ஒன்றிய ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (BITE) இயங்கி வருகின்றன. மேலும், 12 அரசு உதவிபெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களும் (Aided), 25 சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களும் (Self Finance TTI) இயங்கி வருகின்றன.

தற்போது 2024-2025 ஆம் கல்வியாண்டில் 12 உதவிபெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் 980 மாணவர் சேர்க்கை இடங்களும், 24 சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் 1450 மாணவர் சேர்க்கை இடங்களும் ஆக மொத்தம் 36 நிறுவனங்களில் 2430 இடங்கள் மட்டுமே 2024-2025 ஆம் ஆண்டிற்கு மாணவர் சேர்க்கை செய்யப்பட வேண்டியுள்ளது. மேலும், 12 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் 1050 இடங்களும், 8 அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் 440 மாணவர் சேர்க்கை இடங்களும், 6 ஒன்றிய ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் 250 மாணவர் சேர்க்கை இடங்களும் நிரப்பப்பட வேண்டியுள்ளது. ஆக மொத்தம் 1740 மாணவர் சேர்க்கை இடங்கள் 2024-2025-ஆம் கல்வியாண்டுக்கு சேர்க்கை செய்யப்பட வேண்டியுள்ளது. அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் இணையதள (Online) வழியாக மாணவர் சேர்க்கை செய்யப்பட வேண்டும்.

மேலும், 2024-2025 ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கைக்கான இடங்கள் இணையதள வழியாக பூர்த்தி ஆகாமல் இருந்தால் அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள காலக்கெடுவிற்குள், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் (DIET), அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் (GTTI), ஒன்றிய ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் (BITE), அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் (GTTI) மற்றும் அரசு நிதி உதவி பெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் (Aided) ஆகியவற்றில், அந்நிறுவன முதல்வர்களே உடனடி சேர்க்கை (Spot Admission) செய்யவும் அனுமதி

www.Padasalai.Net

வழங்குமாறு மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் கோரியுள்ளார்.

மேலும், 2023-2024 ஆம் கல்வியாண்டிற்கான தொடக்கக் கல்வி பட்டயப் படிப்பிற்கான மாணவர் சேர்க்கை ஜூலையில் நடைபெறும் பொருட்டு அரசாணை (நிலை) எண் 92, பள்ளிக் கல்வித் (ERT) துறை, நாள் 22.05.2023-இல் அரசின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது 2024-2025 ஆம் கல்வியாண்டின் மாணவர் சேர்க்கையினை அதிகரிக்கும் பொருட்டு ஜூன் மாதம் மாணவர் சேர்க்கைக்கு அனுமதி வழங்குமாறும், அதனைத் தொடர்ந்து கல்வியாண்டினை ஜூன் மாதம் முதல் மே மாதம் வரை மேற்கொள்ளவும், மேலும் இணைப்பில் குறிப்பிட்டுள்ள அட்டவணையின்படி தொடக்கக் கல்வி பட்டயப் படிப்பு செயல்பாடுகளின்படி இயங்க அனுமதி வழங்குமாறும் கோரியுள்ளார்.

எனவே, மேலே குறிப்பிட்டபடி அரசால் நடத்தப்படும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் தொடக்கக் கல்வி பட்டயப் படிப்பிற்கு இணையதளம் (Online) மூலமாக ஜூன் மாதம் முதல் மாணவர் சேர்க்கை செய்வதற்கும், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணை பத்தி 4 (V)-இல் தெரிவிதுள்ளபடி உதவி பெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை பொறுத்த மட்டில் அந்தந்த நிறுவனங்களே இணையதளம் (Online) மூலம் விண்ணப்பங்களை வழங்கி மாணவர் சேர்க்கை செய்வதற்கும் ஆணை வழங்குமாறு மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

6. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் கருத்துருவை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, 2024-2025 ஆம் கல்வியாண்டில் தொடக்கக் கல்வி பட்டயப் படிப்பிற்கான மாணவர் சேர்க்கையினை கீழ்க்காணும் வழிமுறைகளை பின்பற்றி மாணவர் சேர்க்கை மேற்கொள்ள மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

(i) 12 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் (DIET), 8 அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (GTTI) மற்றும் 6 ஒன்றிய ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (BITE) ஆகியவற்றில் அனுமதிக்கப்பட்ட 1740 மாணவர் சேர்க்கை இடங்களுக்கும், 12 உதவி பெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் 980 மாணவர் சேர்க்கை இடங்களுக்கும் மற்றும் 24 சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் 1450 மாணவர் சேர்க்கை இடங்களுக்கும், ஆக மொத்தம் 36 நிறுவனங்களில் உள்ள அனுமதிக்கப்பட்ட 2430 மாணவர் சேர்க்கை இடங்களுக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணை பத்தி 4(V)-இல் தெரிவித்துள்ள நெறிமுறைகளை பின்பற்றி அந்தந்த ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களே இணையதளம் (Online) மூலம் விண்ணப்பங்களை வழங்கி மாணவர் சேர்க்கை செய்தல்.

www.Padasalai.Net

(ii) தொடக்கக் கல்வி பட்டயப் படிப்பு கல்வியாண்டினை முதலாம் ஆண்டிற்கு 2024 ஜூன் மாதம் முதல் 2025 மே மாதம் வரையிலும், இரண்டாம் ஆண்டிற்கு 2024 ஜூலை மாதம் முதல் 2025 ஜூன் மாதம் வரை மேலே பத்தி 2இல் காணும் தொடக்கக் கல்வி பட்டயப் படிப்புளுக்கான கால அட்டவணையின்படி செயல்படுத்துதல்.

(iii) அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள காலக் கெடுவிற்குள் இணையதள வழியாக மாணவர் சேர்க்கை இடங்கள் பூர்த்தியாகாமல் இருந்தால் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் (DIET), ஒன்றிய ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் (BITE), அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் (GTTI) மற்றும் அரசு நிதி உதவி பெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் (Aided) ஆகியவற்றில் அந்நிறுவன முதல்வர்களே உடனடி சேர்க்கை (Spot Admission) செய்தல்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.குமரகுருபரன்
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை-6.
அனைத்து மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர்கள்
(மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர்,
சென்னை -6 வழியாக)

நகல்
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-09.
பள்ளிக் கல்வித் துறை செயலாளர் அவர்களின்
முதன்மை தனிச் செயலாளர், சென்னை-09.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

www.Padasalai.Net

இணைப்பு

அரசாணை (நிலை) எண்.107, பள்ளிக் கல்வித் (சுஆப) துறை, நாள்.20.05.2024

தொடக்கக் கல்வி பட்டயப் படிப்பு செயல்பாடுகளுக்கான கால அளவு

| வ.எண் | செயல்பாடுகள் (Activity) | 2024-2025 | |
|---|---|---|---|
| | | முதலாம் ஆண்டு | இரண்டாம் ஆண்டு |
| 1. | ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சியின் கல்வி ஆண்டு (இரண்டு ஆண்டுகள்) | 2024ஜுன் முதல் 2025 மே வரை | 2024 ஜுலை முதல் 2025 ஜுன் வரை |
| 2. | அரசு/ உதவி பெறும்/சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் விண்ணப்பங்கள் பெறப்படும் நாட்கள் | 2024 - மே 30 வரை | --- |
| 3. | பெறப்பட்ட விண்ணப்பங்களை பரிசீலித்தல் (இன சுழற்சி, மதிப்பெண்கள் மற்றும் இதர சான்றுகளை சரிபார்த்தல்) | 2024 - மே 31 முதல் ஜுன் 3 முடிய | --- |
| 4. | மதிப்பெண் மற்றும் இன சுழற்சி அடிப்படையில் மாணவர்களை தேர்வு செய்தல் | 07.06.2024 வரை | --- |
| 5. | ஆசிரியர் கல்வி பயிற்சி வகுப்புகள் துவக்கம் (சுயநிதி மற்றும் உதவி பெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் உட்பட) | 14.06.2024 வரை | --- |
| 6. | அரசு/ உதவி பெறும்/ சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவன மாணவர் சேர்க்கை ஒப்புதல் | 2024 ஜுலை மாதம் முதல் வாரம் | --- |
| 7. | சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவன ஆசிரியர் பணியாளர் பட்டியல் (Staff list) ஒப்புதலுக்கான இறுதி நாள் | ஒவ்வொரு ஆண்டும் ஜுன் மாதம் 20ஆம் தேதி | --- |
| 8. | உற்று நோக்கல் மற்றும் கற்பித்தல் பயிற்சிகள் (Observation and Teaching Practice) | 2024 ஆகஸ்ட் மாதம் முதல் 2024 நவம்பர் மாதம் வரை (10 + 15 + 15 நாட்கள்) | 2024 ஆகஸ்ட் மாதம் முதல் 2024 நவம்பர் மாதம் வரை (10+15+15 நாட்கள்) |
| 9. | அகமதிப்பீடு (Internal Assessment) | 2025 ஏப்ரல் மாதம் | 2025 ஏப்ரல் மாதம் |
| 10. | பொதுத் தேர்வு (Public Examination) | 2025 மே மாதம் | 2025 ஜுன் மாதம் |

ஜெ.குமரகுருபரன்
அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்